## திருநெல்வேலி மாநகராட்சி

## 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் நாள் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020-21ன் (IUDM 2020-21) கீழ் , கீழ்க்கண்டுள்ள சாலைப்பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை G.O.(D) No.303 MA&WS (MA-2) Department dated 09.09.2020–ன்படி ரூ.440 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ரூ.352 இலட்சம் மானியமாகவும் மாநகராட்சி பங்குத் தொகையாக 88 இலட்சம் ஆக மொத்தம் ரூ.440.00 இலட்சத்திற்கு அனுமதித்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

Rs. In Lakhs

| S. No | Corporation | Name of the Road | Bus route/ Others | Length in KM | Width in M | Pro posed Cost | App raised cost | IUDM Share | ULB Share |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Johnson Nagar 1st main road | | 0.660 | 4.50 | | | | |
| | | Johnson Nagar 2nd main road | | 0.675 | 4.50 | | | | |
| | | Johnson Nagar 4th main road | | 0.665 | 4.50 | | | | |
| 22 | Tirunelveli Corporation | 80' Scheme road from Kamarajar salai to STC campus | | 0.560 | 5.50 | 440.00 | 440.00 | 352.00 | 88.00 |
| | | Ramayanpatti Compost yard west portion . | Others | 1.225 | 7.50 | | | | |
| | | (i)Kakkanji street | | 0.150 | 4.10 | | | | |
| | | (ii)Kaivinaijar street | | 0.150 | 4.10 | | | | |
| | | (iii)Lakshmi nagar | | 0.875 | 4.10 | | | | |
| | | (iv)Amaravathi nagar | | 1.150 | 4.10 | | | | |
| | | (v)Thangalakshmi nagar | | 1.050 | 4.10 | | | | |
| | | TOTAL | | 7.160 | | | | | |

அலுவலகக்குறிப்பு:

மேற்கண்டவாறு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020-21ன் கீழ், இம்மாநகராட்சிக்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின்படி மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணிகளை IUDM பங்குத் தொகை ரூ.352 இலட்சம் மற்றும் மாநகராட்சி பங்குத் தொகை ரூ.88.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.440.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 124:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

2) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு) திருநெல்வேலி-07 கடிதம் ந.க.எண் 2455/விற்பனை/2020, நாள் 02.9.2020-ம் தேதிய கடிதத்தின்படி திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை கிருஷ்ணா கேண்டீனுக்கும் தூய யோவான் கலைக்கல்லூரிக்கும் இடையே உள்ள ஜான்ஸ் கல்லூரி சாலை அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆவின் பால் பூத் 10''X10'' அளவில் ஆவின் பாலகம் அமைத்து ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய இடம் ஒதுக்கீடு செய்து தர கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் பாளையங்கோட்டை மண்டலம் அவர்களது 03.9.2020-ம் தேதிய அறிக்கை மற்றும் செயற்பொறியாளர் (தி) அவர்களின் அறிக்கையில் திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலத்திற்குட்பட்ட, ஜான்ஸ் காலேஜ் ரோடு சாலையில் தற்காலிக கடை எண் 45-ற்கு அருகில் 10'' X 10'' என்ற அளவில் நிபந்தனைகளுக்குட்பட்டு வாடகை நிர்ணயம் செய்து வழங்க அறிக்கை செய்துள்ளார்.

அதன்படி திருநெல்வேலி மாநகராட்சி பாளைங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட ஜான்ஜ் காலேஜ் கல்லூரி சாலையில் மாநகராட்சி தற்காலிக கடை அமைக்கப்பட்டுள்ள இடத்தின் அருகில் ஆவின் பால் பூத் 10'' X 10'' அளவில் நிபந்தனைக்குட்பட்டு இடம் ஒதுக்கீடு செய்வது குறித்தும், அதற்கு மாத வாடகையாக ரூ.2000/- என நிர்ணயம் செய்திடவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. பாளைங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட ஜான்ஸ் காலேஜ் கல்லூரி சாலை மாநகராட்சி தற்காலிக கடை அமைக்கப்பட்டுள்ள இடத்தின் அருகில் ஆவின் பாலகத்திற்கு மாத வாடகையாக குறைந்தபட்ச நிர்ணயத் தொகையாக ரூ.2000/-ம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

2. மனுதாரர் மாநகராட்சி சாலை ஓரத்தில் 10'' X 10'' என்ற அளவில் ஆவின் பூத் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் வகையில் இருத்தல் கூடாது.

3. மனுதாரர் மேற்படி ஆவின் பாலகத்தில் ஆவின் பாலக பொருட்கள் மட்டுமே விற்கப்படவேண்டும் போதை பொருட்களான சிகரெட், பீடி, புகையிலை, பாக்கு ஆகிய இனங்கள் மற்றும் வடை, சாப்பாடு சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதும் விற்கப்பட கூடாது.

4. மாநகராட்சி நிபந்தனைகளின்படி (எண்.12) குத்தகை காலத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுவதையும் அல்லது எந்த பாகமாவது மாநகராட்சிக்கு தேவையானால் குத்தகைதாரர் எந்தவித தடையும் இன்றி எவ்வித இழப்பு தொகையும் கோராமல் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும் எனவும் இதில் மாநகராட்சி தீர்ப்பே முடிவானது.

5. இதற்கென ரூ.20 பத்திரத்தில் ஒப்பந்தபத்திரம் தயார்செய்து மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவேண்டும்

6. கடை வாடகையினை பிரதி மாதம் 1-ம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும்

அலுவலக குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட ஜான்ஸ் காலேஜ் கல்லூரி சாலை மாநகராட்சி தற்காலிக கடை அமைக்கப்பட்டுள்ள இடத்தின் அருகில் ஆவின் பால் பூத் 10'' X 10'' அளவில் நிபந்தகைக்குட்பட்டு ஆவின் பாலகத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்வது குறித்தும், அதற்கு மாத வாடகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.1500/- என நிர்ணயம் செய்திடவும் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 125:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

3) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண.26458/2018/P1 நாள் 24.07.2020ல் ரூ.33.56 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள்

பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 13/2020-21-ன் படி மாநில அளவில் Times of India ஆங்கில நாளிதழிலும், தினச்செய்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 06.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore மற்றும் (2) திரு.M.வள்ளிநாயகம், திருநெல்வேலி ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 27.08.2020-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.M.வள்ளிநாயகம், திருநெல்வேலி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 07.09.2020ன்படி திரு.M.வள்ளிநாயகம், திருநெல்வேலி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 15.09.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 28 பரப்புரை யாளர்கள், 4 மேற்பார்வை யாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் | ரூ.33,52,134/- | ரூ.33,55,062/- |
| | | | 0.09% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.33,55,062/- ஆனது மதிப்பீட்டை விட 0.09% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 15.09.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.09.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது பணிக்கு தேவையான பணியாளர்களின் ஊதியம் ஆகியவை அதிகமாகிவிட்டபடியால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 17.09.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.33,55,062/- மதிப்பீட்டை விட 0.09% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் பணி மிகவும் அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான

பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 17.09.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.Mirifical Careers Pvt Ltd, Coimbatore ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.33,55,062/- மதிப்பீட்டை விட 0.09% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 126:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.எண்.13/2020-21)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 51, டவுண் குற்றாலரோடு, கிருஷ்ணபேரி பகுதியில் புதிததாக கட்டப்பட்டிருக்கும் குடியிருப்புப் பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்க கோரப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் ஏற்கனவே தெருவிளக்கு Line உள்ள 2 மின்கம்பங்களில் 40 வாட்ஸ் LED விளக்குகள் 2 எண்ணமும், ஏற்கனவே உள்ள 7 மின்கம்பங்களில் தெருவிளக்கு Line அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 7 எண்ணமும் மற்றும் புதியதாக 1 மின்கம்பம் மற்றும் தெருவிளக்கு line அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 1 எண்ணம், ஆக மொத்தம் புதிய தெருவிளக்குகள் 10 எண்ணம் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு மின்வாரிய மதிப்பீட்டுக் கட்டணம் மற்றும் விளக்குகள் மதிப்பீடு சோத்து உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பாாவைக்கும், அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதியதாக 40 W LED தெருவிளக்குகள் 10 எண்ணம் அமைக்கவும், தெருவிளக்குகளின் மதிப்பு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டுக் கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 127:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/1519/2020)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலலகங்களில் கணினி பராமரிப்பு பணி மேற்கொள்ள உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் அனுமதிக்கப்படாத நிலையிலும், இப்பொருள் தொடர்பாக நன்கு அறிந்த பணியாளர்கள் இல்லாத நிலையிலும், இப்பணியின் முக்கியத்துவம் கருதி கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் (Software and Hardware) பராமரிப்பு பணி அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி அவர்கள் மூலம் 01.06.2016 முதல் 31.05.2019 முடிய மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1,00,000/- + 15,000/- + சேவை வரி 15% என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்பட்டுவரப்பெற்றது.

31.05.2019-ல் மேற்படி மூன்றாண்டுகள் ஒப்பந்தம் முடிடைந்த நிலையில் 01.06.2019 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு இப்பராமரிப்பு பணியை அதே கட்டணத்தில் மேற்கொள்ள அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி நிறுவனத்தால் விருப்பம் தெரிவித்து 28.05.2019-ல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

இப்பணியின் முக்கியத்துவம் கருதி அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி நிறுவனத்திற்கு மேலும் மூன்று ஆண்டு காலங்களுக்கு அதாவது 01.06.2019 முதல் 31.05.2022 வரை மாதம் ஒன்றிற்கு ரூ.1,00,000/- + சேவை வரி (18%) என்ற விகிதத்தில் ஒப்பந்தம் வழங்கிட மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலக கணினி செயல்பாடுகளின் மென்பொருள் மற்றும் வன்பொருள் பராமரிப்புப் பணியின் முக்கியத்துவம் கருதி அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி நிறுவனத்தின் விருப்பக் கடிதத்தின்படி மேலும் மூன்று ஆண்டு காலங்களுக்கு அதாவது 01.06.2019 முதல் 31.05.2022 வரை மாதம் ஒன்றிற்கு ரூ.1,00,000/- + சேவைவரி (18%) என்ற விகிதத்தில் ஒப்பந்தம் வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நிர்வாக நலன் கருதி அவசர அவசியத்தை முன்னிட்டு, ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் இப்பராமரிப்புப் பணியினை மேற்கண்ட கட்டண விகிதத்தில் மெசர்ஸ் அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி நிறுவனத்திற்கு 01.06.2019 முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்ததை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 128:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண். இடிபி / 10452 / 2008)

---

6) திருநெல்வேலி மாநகராட்சியின் 2019-2020ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சியின் 2019-2020ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 129:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் சி1/2319/2020)

---

7) திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண் 1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி), வார்டு எண் 39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ.289.01 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு அரசாணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக ந.க.எண்.18281/2017/DO1 நாள் 14.11.2017ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு ஆசிய மேம்பாட்டு வங்கியில் இருந்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலமாக 19.11.2017ல் தடையின்மை சான்று பெறப்பட்டதின்படியும் 5.1.2018ல் மூடி முத்திரையிடப்பட்ட இருஉறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நிர்வாக காரணங்களால் மேற்படி தேதியில் பெறப்பட இருந்த ஒப்பந்தப்புள்ளிகள் 31.1.2018 வரை பெறப்படும் என கால நீட்டிப்பு செய்யப்பட்டு அவ்வாறே 31.1.2018ல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அவற்றுள் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Larsen & Toubro Construction Limited, Chennai நிறுவனத்தின் இறுதிக்கட்ட விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் துறை மதிப்பீட்டில் இருந்து 12.00 சதவீதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளியை (தொகை ரூ.291.81 கோடி) மாமன்றத் தீர்மானம் எண்.31 நாள் 4.6.2018ல் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 25.07.2018 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு, வேலை ஆணை வழங்கப்பட்ட 36 மாத காலத்திற்குள் மேற்படி திட்டப்பணியை முடிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

தற்போது மேற்படி திட்டப்பணியில் ஜீன் 2020 வரையிலான காலத்திற்கு 71.86 சதவிகிதம் திட்டப்பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையில் 46.10 சதவிகித

பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட திட்டப்பணி நடைபெறும் பொழுது அளவுகளை கணக்கீடு செய்து அவ்வாறு கூடுதலாக வரும் அளவுகளையும் அவற்றிற்கான தொகையினையும் கணக்கீடு செய்யப்பட்டுள்ள விபரம் கீழ்க்கண்டவாறு :- (இணைப்பு 1ல் கண்டவாறு)

<u>ஜீன் 2020 வரையிலான காலத்திற்கு</u>

- மதிப்பீட்டின்படி உள்ள தொகை :. ரூ.1,43,50,029/-
- ஜீன் 2020 வரை செய்து முடிக்கப்பட்டது : ரூ.2,26,99,577/-
- திட்டப்பணி நடைபெறும் போது மதிப்பீட்டை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை : ரூ. 83,49,548/-

(1) மேற்கண்ட கணக்கீட்டின்படி திட்டப்பணி நடைபெறும் போது ஜீன் 2020 வரையிலான மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை ரூ.83,49,548/- க்கு மாமன்ற அனுமதி பெற்றும் (இணைப்பு 1ல் கண்டவாறு)

(2) மேற்படி திட்டப்பணியில் மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்கள் பணித்தளத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதாலும் இத்திட்டப்பணி நடைபெறும் பொழுது ஜீன் 2020 வரையிலான அளவுகளுக்கும் அதற்கான தொகை ரூ.5,70,73,226/-க்கு மாமன்ற அனுமதி பெற்றும் (இணைப்பு -2ல் கண்டவாறு).

(3) மேற்படி மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்களுக்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி விலை விகிதத்தை கணக்கீடு செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி பெற்று முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறும் பொருட்டு மாமன்ற அனுமதியுடன் பரிந்துரை செய்ய மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி), வார்டு எண்.39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டப்பணியில், மதிப்பீட்டில் உள்ள இனங்களில் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட திட்டப்பணி நடைபெறும் பொழுது அளவுகளை கணக்கீடு செய்து அவ்வாறு கூடுதலாக வரும் அளவுகளையும் அவற்றிற்கான தொகையினையும் கணக்கீடு செய்து

(1) மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை ரூ.83,49,548/-க்கு மாமன்ற அனுமதி பெற்றும் (இணைப்பு 1ல் கண்டவாறு

(2) மேற்படி திட்டப்பணியில் மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்கள் பணித்தளத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதாலும் இத்திட்டப்பணி நடைபெறும் போது ஜீன் 2020 வரையிலான அளவுகளுக்கும் அதற்கான தொகை ரூ.5,70,73,226/-க்கு மாமன்ற அனுமதி பெற்றும் (இணைப்பு -2ல் கண்டவாறு).

(3) மேற்படி மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்களுக்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி விலை விகிதத்தை கணக்கீடு செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி பெற்று முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 130:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ3//1453/15)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 22, மனகாவலம்பிள்ளை மருத்துவமனை ரோட்டில் (தெப்பகுளம் சுற்றியுள்ள பகுதி0 ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள இடமானது அரசு புறம்போக்கு ஆகும். மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டிலிருந்து கழிவுநீர் சிவன்கோவில் தெப்பக்குளத்தில் கலப்பதால் இந்து அறநிலையத்துறை மூலம் மேற்படி வீடுகளை அகற்றத் தெரிவித்துள்ளனர்

மேலும் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகள் அனைத்தும் கட்டிட உறுதித் தன்மையற்ற மேற்கூரை இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதால் உடனடியாக இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என பொதுப்பணித்துறை செயற் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதன் பொருட்டு மேற்படி ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள குடியிருப்புதாரர்களை உடனடியாக காலி செய்யும்படி இவ்வலுவலகம் மூலம் பலமுறை அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஆக்கிரமிப்புதாரர்கள் யாரும் மேற்படி இடத்தை காலி செய்யவில்லை.

தற்போது எதிர்வரும் பருவ மழைக்காலத்தை முன்னிட்டு மேற்படி கட்டிடங்களில் ஸ்திரத்தன்மையின்றி முற்றிலும் இடிந்து விழும் சூழ்நிலை உள்ளதால் பெரும் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்படும் அபாய நிலை உள்ளதாலும் அதனைத் தடுக்கும் பொருட்டும், மேற்படி ஆக்கிரமிப்பில் கட்டப்பட்டுள்ள இடமானது அரசு புறம்போக்காக உள்ளதாலும், மேற்படி ஆக்கிரமிப்புகளை உடனடியாக அப்புறப்படுத்தும்படி திருநெல்வேலி உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ5/02/2002, நாள் 19.08.2020-படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. மேலும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 08.09.2020ம் தேதிய ஆய்வுக்கூட்டத்திலும் உடனடியாக மேற்படி ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அகற்ற அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

திருநெல்வேலி உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றம் சார் ஆட்சியரின் செயல்மறை ஆணை எண் அ5/02/2002, நாள் 19.08.2020 படி மேற்கண்ட பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் ஆக்கிரமிப்பு என உறுதி செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் அக்கட்டிடங்களுக்கு மாநகராட்சி சொத்துவரி, குடிநீர் கேட்பு பதிவேடுகளில் உள்ள கீழ்க்கண்ட வரிவிதிப்புகளை இரத்து செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி வரிவிதிப்புகளை இரத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு இப்பொருட்சீட்டு வைக்கப்படுகிறது.

ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளின் விபரம்:

சொத்துவரி:

| வ. எண். | கதவு எண். | சொத்துவரி வரி விதிப்பு எண். | வரி விதிப்புதாரர் பெயர் | நிலுவைக் காலம் | நிலுவைத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | 3A/3 | 146/50925 | எஸ். கிருஷ்ணன் | - | - |
| 2. | 3A/14 | 146/50941 | ரத்தினசாமி | 2018-19 I முதல் 2020-21 II வரை | 648/- |
| 3. | 3A/13 | 146/50940 | அமீர் ஜவஹர் | 2020-2021 II வரை | 180/- |
| 4. | 3A/12 | 146/50939 | அசோகன் | 2020-2021 II வரை | 216/- |
| 5. | 3A/11 | 146/50938 | வடிவு என்ற ஆறுமுகம் | 2018-19 I முதல் 2020-21 II வரை | 492/- |
| 6. | 3A/10 | 146/50937 | பெருமாள்ஆச்சாரி | 2017-18 I முதல் 2020-21 II வரை | 656/- |
| 7. | 3A/9 | 146/50936 | ஹைருன்னிசாபீவி | 2018-19 I முதல் 2020-21 II வரை | 402/- |
| 8. | 3A/8 | 146/50935 | இசக்கியம்மாள் | - | - |
| 9. | 3A/7 | 146/50934 | வேல் ஆசாரி | - | - |
| 10. | 3A/6 | 146/50933 | சுப்பம்மாள் | 2020-2021 II வரை | 134/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | 3A/5 | 146/50932 | பிச்சையா | - | - |
| 12. | 3A/4 | 146/50931 | எஸ். உஷா | 2020-2021 II வரை | 164/- |
| 13. | 3A/3 | 146/50930 | பார்வதி | 2020-2021 II வரை | 118/- |
| 14. | 2 | 146/51627 | பஞ்சவர்ணம் | - | - |
| | | | மொத்தம் | | 3010/- |

குடிநீர்க் கட்டணம்:

| வ. எண். | கதவு எண். | குடிநீர்க் கட்டண வரி விதிப்பு எண். | வரி விதிப்புதாரர் பெயர் | நிலுவைக் காலம் | நிலுவைத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | 3A/3 | 146/220439 | எஸ். கிருஷ்ணன் | 2020-2021 III & IV | 600/- |
| 2 | 3A/13 | 146/022/00501 | அமீர் ஜவஹர் | 2020-2021 I to IV | 1200/- |
| 3 | 3A/11 | 146/022/00448 | வடிவு என்ற ஆறுமுகம் | 2004-2005 I to 2020-2021 IV | 16160/- |
| 4 | 3A/7 | 146/022/01054 | வேல் ஆசாரி | - | - |
| 5 | 3A/6 | 146/220461 | சுப்பம்மாள் | 2020-2021 I to IV | 1200/- |
| 6 | 3A/5 | 146/220444 | பிச்சையா | 2019-2020 III to 2020-2021 IV | 1800/- |
| | | | மொத்தம் | | 20960/- |

அலுவலகக் குறிப்பு

மேற்படி கட்டிடங்களில் ஸ்திரத்தன்மையின்றி முற்றிலும் இடிந்து விழும் சூழ்நிலை உள்ளதால் பெரும் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்படும் அபாய நிலை உள்ளதாலும் அதனைத் தடுக்கும் பொருட்டும், மேற்படி ஆக்கிரமிப்பில் கட்டப்பட்டுள்ள இடமானது அரசு புறம்போக்கு என உறுதி செய்யப்பட்டுள்ளதாலும் மேற்படி ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அப்புறப்படுத்தும்படி திருநெல்வேலி உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும் மேற்கண்ட கட்டிடங்களுக்கு இவ்வலுவலக கேட்புப் பதிவேடுகளில் உள்ள சொத்துவரி விதிப்பு மற்றும் குடிநீர் கட்டண வரி விதிப்புகளை இரத்து செய்து அவற்றிற்கான கேட்புத் தொகை மொத்தம் ரூ.23970/- நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 131:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(அ8/4112/2020-பாளை)